**கழுக்கம்**

# நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையம்

**22.05.2018**ஆம் நாள் தூத்துக்குடியில் நடந்த துப்பாக்கி சூட்டின் விளைவாக இறப்பு, காயங்கள் ஏற்பட்டதற்கான காரணங்கள், சூழ்நிலைகள் குறித்தும் சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்குலைவுகள் காரணமாக பொது சொத்துக்கள், தனியார் சொத்துக்கள் ஆகியவற்றிற்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் உள்ளிட்ட பிந்தைய நிகழ்வுகள் குறித்து விசாரிப்பதற்கு அமைக்கப்பட்டது.

இறுதி அறிக்கை

பகுதி - III

## நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன்

# நீதியரசர் திருமதி. அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையம்

# இறுதி அறிக்கை

பகுதி – III

# தொகுப்பு – III

## ஆய்வு வரம்பு எண்: I மற்றும் II

I. 22.05.2018-ஆம் நாள் நடந்த துப்பாக்கிச்சூட்டின் விளைவாக இறப்பு மற்றும் காயங்கள் ஏற்பட்டதற்கான மற்றும் சூழ்நிலைகள் குறித்தும், தூத்துக்குடியிலும் அதன் அருகாமைப் பகுதிகளிலும் சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்குலைவுகள் காரணமாக பொதுச்சொத்துக்கள் மற்றும் தனியார் சொத்துக்கள் ஆகியவற்றிற்கு சேதம் ஏற்பட்டதா?

II.சூழ்நிலைகளுக்கு தகுந்த பலப்பிரயோகம் உபயோகிக்கப்பட்டதா? துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு முன் உரிய அனைத்து முன்னெச்சரிக்கை நடைமுறைகளும் கடைபிடிக்கப்பட்டனவா?

மேற்சொன்ன ஆய்வு வரம்புகளுக்கு பதில் அளிக்கும் விதமாக கீழ்கண்டவாறு விளக்கத்தினை விசாரணை ஆணையம் தொகுத்து வழங்கியுள்ளது.

தூத்துக்குடியில் 22.05.2018 மற்றும் 23.05.2018 ஆகிய தினங்களில் நடந்த துப்பாக்கி சூட்டின் விளைவாக ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் காயங்கள் பொறுத்து ஒவ்வொரு சந்தர்ப்ப சூழ்நிலையையும் மற்றும் அதன் தொடர்பாக நடந்த சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் மற்றும் பொது மற்றும் தனியார் சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் விலாவாரியாக தொகுப்பு I மற்றும் தொகுப்பு II இல் கையாளப்பட்டுள்ளது என்பதை ஆணையம் குறிப்பிடுகிறது.



அதில் விவரிக்கப்பட்டுள்ள முக்கியமான அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

1. 20.05.2018 அன்று நடைபெற்ற அமைதி பேச்சு வார்த்தை பயனற்ற மற்றும் தவறான பிரதிநிதித்துவம் உடையது.

ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தை நடத்த அதிக அக்கறையுடன் செயல்படுத்த இருந்த முக்கியமான போராட்டக் குழுவினரை அமைதி பேச்சு வார்த்தையில் பங்கெடுத்துக் கொள்ள அழைக்கப்படாதது. அதனை தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாதது.

ஆணையத்தால் விசாரிக்கப்பட்ட அரசு அதிகாரிகளின் சாட்சியங்களில் இருந்தே, போராட்டக்காரர்களின் மத்தியில் போராட்டம் நடத்த திட்டமிட்டிருந்தது பொறுத்து ஒரு பிளவு ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. அத்தகைய பிளவு, மாவட்ட நிர்வாகத்தினருக்கு ஒரு உண்மையை வெளிப்படுத்தும் செய்தியாக (Eye Opener) இருந்து, உடனடியாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க எதுவாக இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் போராட்ட தேதியான 22.05.2018 என்பது அப்போது வெகு தூரத்தில் இருக்கவில்லை. சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களின் ஆதாரமற்ற கூற்றுக்களை தவிர மாவட்ட நிர்வாகம் எதிர்பாராத அந்த நிலையுறுதியற்ற நிலையை கட்டுப்படுத்த கூடிய சீரிய முயற்சிகள் எதுவும் எடுத்ததாக சாட்சியம்



INSIDE COLLECTORATE

எதுவும் ஆணையத்தின் முன் வைக்கப்படவில்லை. (பத்தி 53- பக்கம் 50ல் விவரித்து சொல்லப்பட்டுள்ளது.)

2. 21.05.2018க்கு வெகு நாட்களுக்கு முன்னரே போராட்ட குழுவினரை அடையாளம் கண்டு கைது செய்யாதது.

அவ்வாறு முடியாத பட்சத்தில் 22.05.2018 அன்றாவது கைது நடவடிக்கையை மேற்கொண்டிருக்க தவறியது.

அமைதியை சீர்குலைக்கும் வகையில் எந்த அமைதிக் குலைவும் இல்லாதவரை பிரச்சனை இல்லை. ஆனால் அரசியல் கட்சிகள், இடதுசாரி சிந்தனையுடைய மக்கள் அதிகாரம், மக்கள் கலை இலக்கியம் பண்பாட்டு கழகம், இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகள் கிளர்ச்சியில் சேர்ந்தபோது ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான கருத்தை முன்வைத்து போராட்டத்தை தீவிரப்படுத்த முயலும் போது பிரச்சனை ஏற்பட வாய்ப்பு உண்டு. இந்த கருத்தை வலியுறுத்தி கூறியிருப்பது வேறு யாருமல்ல காவல் துறையின் உச்சபட்ச அதிகாரி காவல் துறை தலைமை இயக்குநர்(DGP) தான். அதனை கருத்தில் கொண்டு போராட்டத்தின் படிப்படியான சீரான வளர்ச்சிகள் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையின் கவனத்தில் எடுத்துக்கொண்டு அதற்கேற்றவாறு விஷமிகளை அடையாளம் கண்டு அவர்களை தடுப்பு காவலில் வைக்கக்கூடிய செயல்திட்ட அணுகுமுறையை கையாண்டிருக்க வேண்டும். அம்மாதிரியான அணுகுமுறையை மேற்கொண்டிருந்தால்



INSIDE COLLECTORATE

போராட்டத்தை நடத்தி செல்பவர்களின் திட்டத்தை முடக்குவதற்கு நீண்ட வழிவகையாக இருந்திருக்கும். ஆனால் அம்மாதிரியான போராட்டக்காரர்களின் முயற்சிகளை முடக்கும் விதமாக நடவடிக்கை எதும் மாவட்ட காவல் துறை எடுத்ததாக எந்த சான்றும் இல்லை. இது மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறையினரின் தெளிவான ஒரு குறைபாடு (பத்தி 64- பக்கம் 59 பாகம் ஐ). பக்கம் 52 முதல் 59, பத்தி 60 முதல் 64ல் விவரிக்கப்பட்டுள்ளது.

3. தொகுப்பு 1ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு மாநில உளவுத்துறை மீது தவறுகை எதுவும் இல்லையெனினும், கிடைக்கப்பெற்ற உளவுத்துறை தகவல்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் கொடுத்து அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளாதது மாவட்ட நிர்வாகத்தின் மிகப்பெரிய தவறு ஆகும் இதனால் மாநில உளவு பிரிவு தலைவரின் நன்கு கணித்து கொடுத்த தகவல்கள் எந்த விதத்திலும் பயனற்று போய்விட்டது. மாநில உளவு துறை தகவலுக்கு பின்பாவது போராட்டத்தை கட்டுக்குள் கொண்டு வரும் வகையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறை தொடர் நடவடிக்கை எடுக்க தவறிவிட்டது.

4. தொகுப்பு 1இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு கு.வி.மு.ச.144 இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தடை உத்திரவு குறித்து சரியான முறையில் பிரகடனப்படுத்தாததும், பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவில் இருந்த குறைபாடுகள் அதிக அளவில் இடரார்ந்ததாக(Grave) இருந்தமையால் தடை



POLICE SHOOTING INSIDE COLLECORATE
(PROTESTERS ARE SCATTERED)

உத்தரவு பயனற்றதாகவும் (nugatory) நடைமுறைபடுத்தாதபடியும் ஆகிவிட்டது. தூத்துக்குடி நகருக்கு உட்பட்ட பகுதியான எஸ்.ஏ.வி. பள்ளி மைதானத்தில் கவன ஈர்ப்பு போராட்டம் நடத்த அனுமதி அளித்து விட்டு அதே சமயத்தில், இரண்டு காவல் நிலைய எல்லைகளைப் பொறுத்து கு.வி.மு.ச.144ன் கீழ் தடை உத்தரவு பிறப்பித்தது பொது மக்களிடையே குழப்பத்தை உண்டு பண்ணி, உண்மையிலேயே தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது. மேலும் உயர்நீதிமன்ற உத்தரவு 18.05.2018 இலேயே W.P.No.11190/18 தடை உத்தரவு பிறப்பிப்பது குறித்து முடிவு எடுக்குமாறு அறிவுறுத்தி, அங்கு நிலவும் சூழ்நிலையை பொறுத்து மாவட்ட நிர்வாகம் முடிவு எடுக்குமாறு பொறுப்பினை மாவட்ட நிர்வாகத்திற்கு கொடுத்திருந்தும், அந்த முடிவை எடுக்க மாவட்ட நிர்வாகம் காலதாமதப்படுத்தியது மாவட்ட ஆட்சியரின் நிர்வாகத்தின் குளறுபடியாகும். சுருங்கச் சொல்லப் போனால், மாவட்ட நிர்வாகம் காலதாமதமாக பிறப்பித்த தடை உத்தரவு பொதுமக்களை குழப்பி, சந்தேகத்திற்கு இடமளித்த காரணத்தினால் பொதுமக்களுக்கு தடை உத்தரவு தெரிந்திருக்கும் என்று எண்ணுவதற்கு ஏதுவாகவில்லை. (பக்கம் 52 முதல் 59, பத்தி 60 முதல் 64ல் விவரிக்கப்பட்டுள்ளது.)

5. மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறையினரிடமும் எந்தவிதமான ஒருங்கிணைப்பும் இல்லாமல் இருந்தது.




REENIS WITH PISTOL NEAR PROTICO

சம்பவத்திற்கு பிந்தைய காலகட்டத்தில் பணிபுரிந்த தூத்துக்குடி காவல்துறை கண்காணிப்பாளர் திரு.அருண் பாலகோபாலன் (எ.த.சா.232) மூலம் குறியீடு செய்யப்பட்ட (எ.த.சா.ஆ.95) தூத்துக்குடி RIOT Scheme இல் சொல்லப்பட்டுள்ள விரிவான வழிகாட்டுதல்களை பின்பற்றவில்லை. மேற்சொன்ன RIOT Scheme, சாதி மத கலவரம் தொடர்பான வழிகாட்டுதல்களாக இருந்தாலும், பொதுவான கலவரத்தை அடக்குவதற்கான வழிகாட்டுதல்களும் அதில் விவரிக்கப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

6. அந்த வழிகாட்டுதல் விதிமுறைகள் எதுவும் இந்த ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக எடுத்த போராட்டத்தில் பின்பற்றவில்லை. மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் இணைந்து ஒருங்கிணைந்து செயல்பட்டு RIOT Scheme2013ல் சொல்லப்பட்டுள்ள செய்ய கூடியவை, செய்ய கூடாதவை ஆகியவற்றை கலந்தாலோசித்து, மாவட்ட நிர்வாகத்தைச் சேர்ந்த அலுவலர்களும், காவல்துறையைச் சேர்ந்த காவலர்களும் அந்த வழிகாட்டுதல்களை நன்கு அறியுமாறு செய்து நடைமுறைப்படுத்தி இருந்தால் நிச்சயம், கலவர சூழ் நிலையை திறமையாக கையாள்வதற்கு ஏதுவாக இருந்திருக்கும். ஆனால் இந்த சம்பவம் தொடர்பான நிகழ்வுகளில் அவ்வித எந்த நடைமுறையையும் பின்பற்றாதது மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் செயல்படாத அதனால் ஏற்பட்ட தவறுகளை நிரூபிக்கதக்கதாக உள்ளது.



INSIDE COLLECTORATE

இதுவும் மோசமான நிலையிலிருந்து மிக மோசமான நிலைக்கு சூழ்நிலை மாறியதற்கு ஒரு காரணமாகும்.

7. அதே போல் Bureau of Police Research and Development கட்டுப்படுத்த என்னென்ன நடைமுறைகள் வழிகாட்டுதல்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதை விவரித்துள்ளது. அவை கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

1.a. The police should first resort to psychological control to disperse the crowd having regard to its nature and tendency.

b. The psychological methods are not exhaustive but invariably include persuasive appeals to the crowd, humorous, witty and light hearted remarks involving no innuendos.

c. Police attitude with a sense of confidence.

d. Making the crowd wait and thereby weaken their will.

e. Causing unexpected distraction and thereby disorient the crowd.

2. If only the psychological tactics supra fail, police can resort to use of force for dispersal of crowd

3. In the event of failure of psychological methods of persuasion, warning and advice and the use of force is inevitable, then the police is required to use the minimum possible force so that damage to life and property is the least.



INSIDE COLLECTORATE

8. Bureau of Police Research & Developmentஇனால் வரையறுக்கப்பட்ட உத்திகளை ஸ்டெர்லைட் எதிர்ப்பாளர்கள் ஊர்வலமாக வந்த போது ஆபத்தான இடங்களில் மேற்கொள்ளாதது கூட்டத்தினரை ஒழுங்குபடுத்த இயலாத ஒன்றாகிவிட்டது.

9. கு.வி.மு.ச. 144 ன் கீழ் தடையாணைக்கு உட்பட்ட பனிமயமாதா தேவாலயம் பகுதியில் கூடிய கூட்டத்தினரின் மனவோட்டத்தை கணிக்க தவறியும், அவர்களை ஆரம்ப கட்டத்திலேயே பெருமளவில் கூடுவதை தடுக்காததும் காவல்துறையினரின் செயல்பாடற்ற தன்மையை காட்டுகிறது. மேலும் காவல்துறையினர் கூட்டம் பெருமளவில் கூடுவதை தடுக்கும் பொருட்டு உரிய உத்திகளை கையாள தவறியதும், மோசமான திட்டமிடலும், அதன் விளைவாக ஏற்பட்ட வீழ்ச்சியும், காவல்துறையினர் முற்றிலும் ஆயத்தம் இல்லாமல் இருந்ததையே வெளிச்சம் போட்டு காண்பிக்கின்றது.

10. எஸ்.ஏ.வி.பள்ளி வளாகத்தை போராட்ட களமாக தவறாக தேர்வு செய்ததும், அதே சமயத்தில் அந்த வளாகத்தை அணுக முடியாத வகையில் அதற்கு வரும் சுற்றுப்புற பாதைகளை பொறுத்து கு.வி.மு.ச.144 தடை உத்தரவு பிறப்பித்ததும் ஒரு தவறான செயல்பாடாகும். (பாகம் 1 - பத்தி 69: பக்கம் 64-65)

11. போராட்டம் நடத்த எஸ்.ஏ.வி பள்ளி மைதானத்தை தேர்வு செய்ததே தவறான ஒன்று. அந்த தவறினை வலுவூட்டும் வகையில் அந்த இடத்திற்கு செல்லும் வழிகளைப் பொறுத்து அந்த வழிகள் அமைந்துள்ள சுற்றுப்புற



PC SUDALAIKANNU INSIDE COLLECTORATE

பகுதிகளுக்கு கு.வி.மு.ச.144 தடை உத்தரவு பிறப்பித்தது ஒரு தவறான அணுகுமுறையாகும்.

12. எஸ்.ஏ.வி பள்ளி மைதானத்திற்கு செல்லக் கூடிய வழிகளின் பகுதிகளுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், அந்த போராட்ட களத்திற்கு செல்வதற்கு தடை உத்தரவு உள்ள பகுதிகளின் வழியாக செல்ல வேண்டி இருக்கும் அவசியத்தை கருத்தில் கொண்டு அந்த இடத்திற்கு செல்வதற்கு உரிய குறிப்பிட்ட பாதைகளை வரையறுத்து அதனை பொதுமக்களுக்கு தெளிவு படுத்த வேண்டியது விவேகமான மற்றும் புத்திசாலித்தனமான நடவடிக்கையாகும். தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இடங்களுக்கு வர இயலாதபடி, தடை உத்தரவை போராட்டக்காரர்கள் மீறாத வகையில் அனுமதி அளிக்கப்பட்ட எஸ்.ஏ.வி பள்ளி மைதானத்தை அடைய மாற்று பாதைகளை மாவட்ட நிர்வாகத்துடன் காவல்துறை அதிகாரிகள் கலந்து ஆலோசித்து பிறப்பித்து இருக்க வேண்டும். அவ்வாறு செய்யாததும், அனுமதி அளிக்கப்பட்ட எஸ்.ஏ.வி பள்ளி மைதானத்திற்கு செல்லும் வழிகளை துல்லியமாக கணிக்க தவறியதன் விளைவு போராட்டக்காரர்கள் தடை உத்தரவை மீறி செல்ல வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. தவிர்த்து இருக்க வேண்டிய நிலைமையை, மேற்சொன்ன வகையில் முரண்பாடாக ஒரு தடை உத்தரவை பிறப்பித்து அதை மீறும் வகையில் வசதியும் செய்து கொடுத்தது மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையினரின் மெத்தனமாகும். இதுவே காரண காரியங்கள் (Cause of Causians) ஆகும்.



**HC RAJA SHOOTING OUTSIDE COLLECTORATE**
**WITH SLR**

13. போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி செல்லும் போது அவர்களை தடுப்பதற்கு போதிய சந்தர்ப்பங்கள் இருந்தும், பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களான, பனிமயமாதா தேவாலயம், வி.வி.டி சிக்னல், 3வது மைல், எப்.சி.ஐ ரவுண்டானா மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகிய இடங்களில் காவல்துறையினரின் தவறான கையாளுதல் காரணமாக ஒவ்வொரு இடத்திலும் பெருமளவு சிக்கல்களை அவர்கள் வரவழைத்துக் கொண்டனர் என்பது கண்கூடான விஷயம்.

14. மாவட்ட ஆட்சியர் திரு.வெங்கடேஷ்,இ.ஆ.ப. (எ.த.சா.243) அவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர் திரு.மகேந்திரன் (எ.த.சா.248) தூத்துக்குடி மாவட்டம் முழுமைக்கும் கு.வி.மு.ச.144ன் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கும்படி கொடுத்த வேண்டுகோளை புறக்கணித்து விட்டு, தூத்துக்குடி நகரின் மையப்பகுதியில் உள்ள சிப்காட் காவல் நிலையம் மற்றும் தென்பாக காவல்நிலைய எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு மட்டுமே தடை உத்தரவு பிறப்பித்தது அவருடைய தவறான கருத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவு என்ற விமர்சனத்திற்கு உள்ளாகிறது. அன்றைய கால கட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த யதார்த்த உண்மைகளை உணராமல், அவற்றை சரிவர மதிப்பீடு செய்யாமல் அவர் எடுத்த முடிவு என்பதையே அது காட்டுகிறது. 22.05.2018 அன்று எஸ்.ஏ.வி பள்ளி மைதானத்தில் கூடி போராட்டம் நடத்த போராட்டக்காரர்களுக்கு ஒருபக்கம் அனுமதி அளித்துவிட்டு அதே சமயம் எஸ்.ஏ.வி. பள்ளி மைதானத்திற்கு செல்லும்



HC RAJA AND PC MURUGAN IN UN UNIFORM ON
TOP OF VAN WITH SLR

வழிகளுக்கு தடை உத்தரவு பிறப்பித்ததன் மூலம் போராட்டக்காரர்கள் எஸ்.ஏ.வி.மைதானத்திற்கு செல்வதை முடக்கும் வகையில் அமைந்துவிட்டது. அதனால் எஸ்.ஏ.வி பள்ளி மைதானத்தில் கூடுவதற்கு கொடுக்கப்பட்ட அனுமதி பயனற்றதாகி விட்டது.

போராட்டக்காரர்களை தடுப்பதற்கு எதுவாக போதுமான வருண் வாகனங்கள், வஜ்ரா வாகனங்கள், தீயணைப்பு வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ் ஆகிய வாகனங்களை வழங்க தவறியதும், அவற்றைக்கொண்டு மேலே குறிப்பிட்ட அந்தந்த இடங்களில் ஒரு வலிமையான முன்புற தடையை ஏற்படுத்தி போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை குண்டு வெடித்தும் தண்ணீர் பீய்ச்சியடித்தும் போராட்டக்காரர்களை கலையச் செய்ய தவறியது மிகப் பெரிய தவறு ஆகும்.

15. வி.வி.டி.சிக்னலில் போராட்டக்காரர்கள் ஊர்வலமாக வந்த சமயத்தில் முதன் முறையாக காவல்துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. அப்போது ஒரே ஒரு வஜ்ரா வாகனம் மட்டுமே பெருமளவு கூடிய கூட்டத்தினரை கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்டது. அத்தகைய பெருங்கூட்டத்தை நிச்சயமாக அந்த ஒரு வஜ்ரா வாகனத்தை மட்டுமே பயன்படுத்தி கட்டுக்குள் கொண்டு வர இயலாது. இன்னும் ஒன்றுக்கு மேற்பட்ட வஜ்ரா வாகனங்கள் இந்த இடத்தில் பயன்படுத்தி இருந்தால் கூட்டத்தை இன்னும் திறமையாக கட்டுக்குள் கொண்டு வந்து இருக்கலாம்.




POLICE NOT IN UNIFORM

இன்னும் சொல்லப் போனால் ரோட்டின் ஒரு பக்கத்தில் கண்ணீர் புகைக்குண்டுகளை அந்த ஒரு வஜ்ரா வாகனத்தில் இருந்து பிரயோகித்த போது, காலியாக இருந்த ரோட்டின் மறுபகுதிக்கு கூட்டம் சென்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி செல்ல ஆரம்பித்துள்ளது ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் வஜ்ரா வாகனம் நிறுத்தப்பட்டு இரண்டு வாகனங்களில் இருந்தும் கண்ணீர் புகை குண்டுகளை பிரயோகிக்கப்பட்டு இருந்தால், கூட்டத்தை திறமையாக கையாண்டு இருக்க முடியும். கூட்டமும் கரைந்து மெல்ல மெல்ல கலைந்திருக்கும். மொத்தம் இருந்த 2 வஜ்ரா வாகனங்களில் ஒன்று மட்டுமே பாளையங்கோட்டை மெயின் ரோட்டில் (NH Road) நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்பதும், இன்னொரு வஜ்ரா வானகம் வீணாக, பயனற்ற வகையில் ஸ்டெர்லைட் ஆலை முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததும், உடனடியாக சம்பவ இடத்திற்கு அந்த வஜ்ரா வாகனத்தை வாவழைத்து பயன்படுத்த எந்தவிதமான முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதும், அதுவும் பெருமளவு கூட்டம் 3வது மைல் பாலத்திலிருந்து இறங்கி வருவதைப் பார்த்தும் அந்த கொந்தளிப்பான சூழ்நிலையில் இன்னொரு வஜ்ரா வாகனத்தை வரவழைக்க எந்த முயற்சியும் எடுக்காதது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

16. காவல்துறையினர் துப்பாக்கி பிரயோகம் செய்வதற்கு முன்பு அதை வெளிப்படுத்தும் விதமாக சமிக்ஞை செய்யும் பொருட்டு, RIOT Flag யை ஏற்றி



POLICE PERSONNEL NOT IN UNIFORM WITH RIFLE

காண்பித்தும், மெகா போன் மூலமும், விசில் சத்தம் மூலமும் எச்சரிக்கை செய்ய தவறியது ஒரு பெரிய தவறுதல் ஆகும்.

17. Police Standing Ordersயை பின்பற்றாதது வெளிப்படையாக தெரிகிறது. PSO705(d) ல் இரண்டு விதமான கலவர கொடி (RIOT Flag) காண்பிப்பது பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. முதல் கலவரக் கொடியை கலவரத்தை அடக்கும் பொருட்டு, கும்பலை கலைக்கும் விதமாக எடுக்கக் கூடிய நடவடிக்கைக்கு முன்பாக பொது எச்சரிக்கை விடுக்கும் விதமாக காண்பித்தல் வேண்டும். இரண்டாவதாக துப்பாக்கி பிரயோகம் செய்வதற்கு முன்பாக எச்சரிக்கை செய்யும் பொருட்டும் கலவர கொடி ஏற்றி காண்பிக்கப்பட வேண்டும். அம்மாதிரி கலவர கொடியை ஏற்றிக் காண்பிப்பது காரண காரியமில்லாமல் இல்லை. அதில் பெரிய மதிநுட்பம் உள்ளது. அவ்வாறு காண்பிப்பதன் நோக்கம் கலவரக்காரர்கள் கலைந்து செல்வதற்கு இறுதி வாய்ப்பு அளித்து வன்முறையில்; ஈடுபடுவதை தடுக்கும் பொருட்டும் அவ்வாறு காண்பிக்கப்படும் சமிக்ஞையையும் மீறி கலவரத்தில் ஈடுபட்டால், அவர்களது நடவடிக்கை தண்டிக்கும் வகையில் இருக்கும் பட்சத்தில், துப்பாக்கி சூடு நடத்த போவதை பற்றி சமிக்ஞை செய்யும் விதமாக இரண்டாவது கலவரக்கொடியை ஏற்றி காண்பித்தும் கலவரம் நீடித்தால் வேறு வழியில்லாமல் போனால் துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிடவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான அறிவு சார்ந்த நடவடிக்கையாகத்தான் இந்த விதிமுறை Pழட்iஉந ளுவயனெiபெ டீசனநசள இல் சொல்லப்பட்டுள்ளது. எந்த காரணத்தைக் கொண்டும் காவல்



TWO POLICE PERSONNEL IN GUN WITH DIG

துறையினர் உணர்ச்சி வசப்பட்டோ அல்லது மன கிளர்ச்சியுற்றோ, சரி சமநிலையிலிருந்து தவறக்கூடாது என்பதுதான் அது உணர்த்தும் குறிப்பாகும்.

18. Police Standing Orders 703ல் 5(b)ன் படி சொல்லப்பட்டுள்ள முக்கியமான விதிகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளது. அவை யாதெனில்

(i) ஒழுங்கற்ற அல்லது கலவரக் கும்பலை கலைக்கும் பொருட்டு எடுத்துக் கொண்ட எல்லா முயற்சியும் தோல்வியுறும் போதுதான் துப்பாக்கி சூடு பிரயோகம் செய்யப்பட வேண்டும்.

(ii) பிரயோகப்படுத்தப்படும் துப்பாக்கி சூடு தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக இருத்தல் வேண்டும். இருப்பதிலேயே பதவி நிலையில் உயர் அதிகாரியாக உள்ள ஒருவர் ஒவ்வொரு சுற்று துப்பாக்கி சூடு பிரயோகித்த பின்னர், கலவர கும்பலின் எதிர்விளைவை கவனித்து பார்த்து, அடுத்தடுத்து சுற்றை பிரயோகிக்க வேண்டும். கலவர கும்பல் கலைந்து போவதற்குரிய அடையாளம் தெரியவந்தால் உடனடியாக இந்த உயர் அதிகாரி துப்பாக்கி சூடு பிரயோகிப்பதை நிறுத்த உத்தரவிடவேண்டும்.

(iii) எந்தக் காரணத்தை முன்னிட்டும் Blank rounds அல்லது வானத்தை நோக்கி சுடுதல் போன்ற எச்சரிக்கும் விதமான முறையில் துப்பாக்கி பிரயோகம் செய்யக்கூடாது. துப்பாக்கி சூடு நடத்த முடிவு செய்துவிட்டால் அது செயல் விளைவுடைய ஒன்றாக இருத்தல் வேண்டும்.



(iv) துப்பாக்கி பிரயோகம் செய்யும் போது இடுப்புக்கு கீழேதான் சுடவேண்டும். மேலும் ஆபத்தை விளைவிக்க கூடிய செயலில் ஈடுபடும் நபரை நோக்கிதான் துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட வேண்டும்.

(v) கடுமையான தூண்டுதல் எதிர்பட்ட போதும், எந்த சந்தர்ப்பத்திலும் பழிக்கு பழி வாங்கும் விதத்திலோ, பழி வாங்கும் பாங்குடனோ இருக்கக் கூடாது. எந்த சந்தர்ப்பத்திலும் காவல்துறை கட்டுப்பாடுடனும், சுய கட்டுப்பாட்டுடனும் செயல்பட வேண்டும்.

தூத்துக்குடியில் நடத்தப்பட்ட இந்த துப்பாக்கி சூடு PSO 703 (5) (b) இல் சொல்லப்பட்டுள்ள விதிமுறைக்கு நேர்முரணாக, துப்பாக்கி சுடுவதில் ஈடுபட்ட காவல்துறையினர் சுடுவதற்கு உத்தரவிட்ட உயர் அதிகாரிகள் உத்தரவுப்படி வானத்தை நேராக சுட்டதாக கூறியிருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

19. இந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் துப்பாக்கி பிரயோகம் செய்த காவல்துறையினர் PSO 703(5)(b)ல் சொல்லப்பட்டுள்ளதற்கு முரணாக வானத்தை நோக்கி சுட்டதாகத்தான் சொல்லி இருக்கிறார்கள்.

20. போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினால் உயிரிழப்போ கொடுங்காயங்களோ ஏற்படக்கூடும் என்பது நன்கு தெரிந்துதான் காவல்துறையினர் துப்பாக்கி பிரயோகத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். அவ்வாறு இருக்கும்பட்சத்தில் போராட்டக்காரர்கள் போராட்டத்தை கைவிட்டுவிட்டு அந்த இடத்திலிருந்து கலைந்து சென்று விட வேண்டும், இல்லையெனில்



ANNA NAGAR

துப்பாக்கி பிரயோகம் செய்து கலைக்க நேரிடும் என்று எச்சரிக்கை செய்து இருக்க வேண்டும். அந்த எச்சரிக்கை உண்மையானதாகவும், உறுதியான எச்சரிக்கை அளிப்பதாகவும் இருத்தல் வேண்டும் பொய்யாகவோ வெறும் சடங்காகவோ இருத்தல் கூடாது.

21. காவல்துறையினர் மெகா போன் மூலமாக நன்றாக காதில் விழும்படியாக போராட்க்காரர்களை உடனே கலைந்து செல்ல வேண்டும் எனவும், இல்லையெனில் துப்பாக்கி சூடு உட்பட பலப்பிரயோகம் செய்ய நேரிடும் என்று எச்சரிக்கை விடுக்க வேண்டும். போராட்டக்காரர்கள் அதை புறக்கணித்து எச்சரிக்கையையும் மீறி சமாதானத்திற்கு ஒப்பாமல் தொடர்ந்து வன்முறை செயல்களில் ஈடுபட்டால் வேறு வழியின்றி துப்பாக்கி பிரயோகம் செய்ய உத்தரவிடுவதில் நியாயம் இருக்கும். ஆனால் இந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் அம்மாதிரியான எச்சரிக்கை விடுத்து போராட்டகாரர்களின் கவனத்திற்கு அந்த எச்சரிக்கையை வெளிப்படுத்தி இருந்தால் போராட்டக்காரர்கள் தங்களை ஆபத்திலிருந்து பாதுகாத்து கொள்ளும் வண்ணம் அந்த இடத்தை விட்டு கலைந்து செல்ல ஒரு முடிவெடுத்திருக்க வாய்ப்பு இருந்திருக்கும். முன் பகுதியில் இருந்த போராட்டக்காரர்களுக்கு காவல் துறையினர் துப்பாக்கி பிரயோகம் செய்யப் போவது தெரியும் என்று வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும் பின் பகுதியில் இருந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு அது தெரிந்திருக்க வாய்ப்பில்லை.



ANNA NAGAR

22. மெகா போன் மூலம் விடுவிக்கப்படும் எச்சரிக்கை பயனுள்ளதாகவும், சத்தமாகவும் எவ்வளவு தொலைவுக்கு கேட்க இயலுமோ அவ்வளவு தொலைவிற்கு கேட்கும் அளவிற்கு இருந்திருக்க வேண்டும். அதற்கு ஏதுவாக காவல் துறையினர் சற்று உயரமான கட்டிடங்களில் இருந்து மாவட்ட ஆட்சியரின் அலுவலகக் கட்டிடத்தின் உயரமான பகுதியில் இருந்தோ அல்லது ஜுசுஜுயு அலுவலக கட்டிடத்தின் மேற்பகுதியில் இருந்தோ அல்லது மாவட்ட ஆட்சியர் வளாக வளைவு அருகாமையில் உள்ள சமூக நல அலுவலகத்தில் இருந்தோ எச்சரிக்கை விடுத்து இருக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு இடத்திலும் காவல்துறை தத்தளித்ததன் காரணமாக போராட்டக்காரர்களுக்கு நன்றாக கேட்கும் வண்ணம் எச்சரிக்கை விடுக்க தவறிவிட்டது. மேலே சொன்ன வகையில் மெகா போன் மூலமாகவோ அல்லது ஒலிபெருக்கி மூலமாகவோ எச்சரிக்கை விடப்பட்டதை காண்பிப்பதற்கு எந்த ஆவணமோ சாட்சியமோ விசாரணை ஆணையத்தின் முன்பாக இல்லை.

23. இந்த துப்பாக்கி சூடு நடைபெற்றபோது போராட்டக்காரர்கள் மீது மறைவிடத்திலிருந்து காவல்துறையினர் துப்பாக்கி பிரயோகம் செய்திருக்கின்றனர். இந்த ஆணையத்தினால் பெறப்பட்ட Ballistic reportஇல் துப்பாக்கி பிரயோகம் தொலை தூர (Long range) பிரயோகமாகத்தான் உள்ளது. குறுகிய தூரம் (short) இல்லை எனவும் கருத்துரை தெரிவித்துள்ளது. அதன் மூலம் தெரிய வருவது என்னவென்றால் காவல் துறையினர் மாவட்ட



UN UNIFORMED POLICE PERSONNEL WITH RIFLE

ஆட்சியர் வளாகத்திற்குள்ளே இருக்கும் Heritate Park-ல் மறைவிடத்தில் இருந்து துப்பாக்கி சூடை நிகழ்த்தியிருக்கிறார்கள் என்பதும் அதன் விளைவாக உயிரிழப்பும் துப்பாக்கி சூட்டு கொடுங்காயங்களும் ஏற்பட்டிருப்பதும் தெளிவாகிறது. இம்மாதிரியான கொடூரமான செய்கையைப் பொறுத்து இந்த விசாரணை ஆணையம் என்ன விமர்சனத்தை முன் வைக்க முடியும்?

24. துப்பாக்கி சூடு பிரயோகம் செய்யாமல் இருந்திருந்தால் ஏற்பட்டிருக்கும் தீங்கு, துப்பாக்கி சூடு நடந்ததால் ஏற்பட்டிருக்கக்கூடிய தீங்கினை விட அதிகமாக இருந்திருக்க முடியாது. துப்பாக்கி பிரயோகம் செய்வதற்கு எதுவான சில சந்தர்ப்பம் இருந்ததாக வைத்துக் கொண்டாலும், துப்பாக்கி பிரயோகம் செய்துதான் கூட்டத்தை கலைக்க வேண்டுமா, துப்பாக்கி பிரேயாகம் செய்யாமல் தவிர்த்து இருந்தால் ஏற்படக் கூடிய தீங்கு என்ன என்பதே தீர்க்கமான கேள்வியாகும். அதற்கான விடை: மேற்சொன்ன இரண்டு தீங்குகளில் குறைவாக தீமை உள்ளதையே எடுத்துக் கொள்ளும் பட்சத்தில், துப்பாக்கி பிரயோகத்தை தவிர்த்து இருந்திருக்க வேண்டியதுதான் குறைவான தீமையாக கொள்ள வேண்டி உள்ளது.

25. மாநில அரசு கலவர கும்பலை அடக்கும் போது ஒழுங்குபடுத்த செய்யும் செயல்பாடுகள் பொறுத்து சில வழிகாட்டுதல்களை வகுத்துள்ளது. சென்னை 127 இல் வண்டலூரில் அமைந்துள்ள Tamil Nadu Police Academy.ஆல் வெளியிடப்பட்ட Drill and Training Manual Paper XIV--ல் அந்த



ANNA NAGAR

வழிகாட்டுதல்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. கலவரத்தை எதிர்நோக்க கூடிய சூழ்நிலைகளை காட்சிபடுத்தி, அது கண்ணீர் புகைக்குண்டு உபயோகித்தோ அல்லது தடியடி பிரயோகம் செய்தோ அல்லது துப்பாக்கி பிரயோகம் செய்தோ எந்த சந்தர்ப்பத்தில் அவை பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதை பல ஆலோசனைகள் மற்றும் மாற்றங்களுக்கு பின்னர் தெளிவு கண்டு வகுத்துள்ளனர். குறிப்பாக Clause 25 அதை வலியுறுத்துகிறது.

26. சட்டவிரோதமாக கூடும் கூட்டத்தை கலைக்க காவல்துறையினர் முற்படும் போது இரண்டு பிரிவுகளாகவோ அதற்கு மேற்பட்ட பிரிவுகளாகவோ, பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒரு தலைமையின் கீழ் செயல்பட வேண்டும். அந்தந்த பிரிவின் கீழ் இயங்கும் காவலர்களுக்கு அந்தந்த பிரிவின் தளபதி கட்டளைகளை இடவேண்டும். அந்த தளபதியின் கட்டளை இல்லாமல் அந்த தளபதியின் கீழ் இயங்கும் காவலர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்யக் கூடாது. கட்டளையிடும் தளபதியும் மிகுந்த கவனத்துடனும் எந்த அளவுக்கு தேவை என்பதை உணர்ந்தும் கட்டளையை பிறப்பிக்க வேண்டும்.

27. கடுமையாக எச்சரித்த பின்பும் கலவர கும்பல் கலையவில்லை என்றால் துப்பாக்கி பிரயோகம் செய்ய உத்தரவிடலாம். அவ்வாறு துப்பாக்கி பிரயோகம் செய்ய உத்தரவிடுவதற்கு முன்னர் பிரிக்கப்பட்டுள்ள பிரிவினர்களில் ஒரு பிரிவினருக்கோ அல்லது இரண்டு பிரிவினருக்கோ துப்பாக்கி பிரயோகம் செய்ய வேண்டும் என்று கருதும் பட்சத்தில் அந்தந்த பிரிவினருக்கு அவர்




SP MAHENDRAN AIMING WITH 9MM PISTOL
(FROM HIS GUNMAN STALIN)

உத்தரவிடலாம். ஆனால் அந்தந்த பிரிவினருக்கு கட்டளையிட்டு, எத்தனை rounds பிரயோகிக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட்டு கூறி, எந்த நேரத்தில் எத்தனை சுற்றுகள் பிரயோகம் செய்யப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டு உத்தரவிட வேண்டும்.

28. ஆனால் இந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் அம்மாதிரியான முக்கியமான வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட்டன என்பதை நிரூபணம் செய்வதற்குரிய ஆதாரங்கள் எதும் இல்லை. வெவ்வேறு காவலர்கள் வெவ்வேறு இடங்களில் எந்தவிதமான ஒழுங்கு முறையும் இல்லாமல் ஒருங்கிணைப்பும் இன்றி, உயரதிகாரி உத்தரவிட்டதன் பேரில் துப்பாக்கி பிரயோகம் செய்ததாகக் கூறிக்கொண்டு பிரிவு 25 (Clause25)ல் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு முரணாக விருப்பம் போல் துப்பாக்கி பிரயோகம் செய்திருக்கின்றனர்.

29. விசாரணை ஆணையம் 20.05.2018 அன்று நடைபெற்ற சரியான பிரதிநிதித்துவம் இல்லாத, பயனற்ற அமைதி பேச்சுவார்த்தை முதல் 22.05.2018 மற்றும் 23.05.2018 ஆகிய தினங்களில் அவசியமற்ற மற்றும் தவிர்த்து இருக்க வேண்டிய துப்பாக்கி பிரயோகம் வரை முக்கிய அம்சங்களை இங்கு சுருக்கமாக குறிப்பிட்டுள்ளது. அவ்வாறு குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்களை ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது, காவல் துறையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கி சூடு பிரயோகம் சரியான பொருத்தமான பலப்பிரயோகம் இல்லை என்றும், நிச்சயமாக வரம்பு மீறி செயல்



ANNA NAGAR

பட்டுள்ளார்கள் என்ற முடிவக்கு வர உந்துகிறது. மேலும் துப்பாக்கிபிரயோகம் செய்யப்படுவதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை இந்த ஆணையத்தால் அந்ததந்த இடங்களில் சுட்டிக்காட்டப்பட்டவாறு செய்து இருக்க வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை (Commissions and Omissions) இருந்ததை இந்த ஆணையம் கவனத்தில் கொண்டு மேற்சொன்ன முடிவுக்கு வருகிறது.

அதன்படி ஆய்வு எண் 1 மற்றும் 2க்கு மேற்கூறியவாறு பதில் அளிக்கப்படுகிறது.

(ஆய்வு எண்: III)

துப்பாக்கி பிரயோகம் செய்ததில் ஏதேனும் காவல்துறையினர் மீது வரம்பு மீறல் இருந்ததா? அவ்வாறெனில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

கீழே விவரிக்கப்பட்ட முக்கிய சூழ்நிலைகள் மற்றும் சம்பவங்கள், துப்பாக்கி சூடு பிரயோகம் செய்த காவல் துறையினர் மீது நிச்சயமாக வரம்பு மீறுதல் இருந்தது என ஆணையம் முடிவுக்கு வர ஏதுவாக உள்ளது.

1. மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள்ளே நடந்த துப்பாக்கி சூட்டில் ஐந்து (5) போராட்டக்காரர்கள் படுகாயமடைந்து உயிரிழந்து இருக்கின்றனர். போராட்டக்காரர்கள் கையில் ஆயுதம் எதுவும் இல்லை. கல்லெறிதலில் ஈடுபட்டு இருந்திருக்கிறார்கள். காவல்துறையினருக்கு உயிரிழக்கும் வகையிலான அல்லது கொடுங்காயம் அடைவதற்கான உடனடி அச்சுறுத்தல்



ANNA NAGAR

எதுவும் இருக்கவில்லை. குறிப்பிடத்தக்க வகையில் எந்த காவல் துறையினருக்கும் உயிரிழப்பு ஏற்படுத்தக்கூடிய கொடுமையான காயங்களோ அல்லது கொடுங்காயங்;களோ ஏற்படவில்லை திரு.மணிகண்டன் என்ற ஒரே ஒரு காவலர் தவிர. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம், அதாவது உதட்டில் கல்லெறிதலில் காயம் ஏற்பட்டு, உதடு கிழிந்து சீழ்; பிடித்து தொடர் சிகிச்சையில் சில நாட்கள் இருந்திருக்கிறார். ஆனால் காவல்துறையினர் பலர் காயமடைந்ததாக கூறிக் கொண்டாலும், மருத்துவ சான்றுகளின்படி, சிலருக்கு ஏற்பட்ட காயங்;கள் மிகச்சாதாரண காயங்களாகவும், மற்றும் சிலருக்கு வெளிப்புற காயங்கள் எதும் இல்லாமலும் இருந்திருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் முதல் துப்பாக்கி சூடு நடைபெற்ற பின்பு உயிரிழப்பு ஏற்பட்ட பின்புதான் மாவட்ட ஆட்சியர் வளாகத்துக்குள்ளே இருந்த ஒரு சில வாகனங்களும் ஸ்டெர்லைட் ஆலை குடியிருப்பு வாசிகளின் வாகனங்களும் ஒரு சில போராட்டக்காரர்களால் தீவைக்கப்பட்டுள்ளன. மாறாக தீ வைக்கப்பட்ட பின்பு துப்பாக்கி சூடு நடைபெறவில்லை. காவல்துறையினர் போராட்டக்காரர்கள் மீது அபாயகரம் இல்லாத ஆயுதங்களை, உதாரணத்திற்கு கண்ணீர் புகை குண்டுகள், வருண் மற்றும் தீயணைப்பு வாகனங்களைக் கொண்டு தண்ணீர் பீய்ச்சி அடித்தல் ஆகியவற்றை உபயோகிப்பதில் கவனம் செலுத்தி, அவை எதுவும் எதிர்பார்த்த பயனை தராத பட்சத்தில் குறைந்த அபாயகரம் உள்ள ஆயுதங்களையோ, வெடிமருந்துகளையோ உபயோகப்படுத்தி இருக்க வேண்டும். உயிருக்கோ உடைமைக்கோ



POLICE TARGETTING PROTESTERS IN ANNA NAGAR
BEFORE KALIYAPPAN GOT INJURED

அச்சுறுத்தல் தரும் வகையில் போராட்டக்காரர்கள் மாறும் பட்சத்தில், மேலே சொன்ன எந்த உபாயங்களும் பலன் தராமல் போகும் போதுதான் துப்பாக்கி பிரயோகம் செய்ய வேண்டும். இம்மாதிரி படிப்படியான அணுகுமுறையை இந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் கையாளப்படவில்லை.

2. ஏற்கனவே பாகம் II-ல் ஆணையத்தால் விவரித்து குறிப்பிட்டுள்ளபடி, காவல்துறை உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படி காவலர்கள் தப்பி ஓடிக்கொண்டிருந்த போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கி சூடு பிரயோகம் செய்திருக்கிறார்கள். இதனை இறந்து போனவர்களின் உடலில் துப்பாக்கி குண்டு பாய்ந்து வெளியேறிய விதத்தை வைத்து தெரிந்து கொள்ளலாம். அதாவது இறந்து போனவர்களில் பின்னந்தலை வழியாக குண்டு துளைத்து, முன் தலை வழியாக உள்ளுறுப்புகளை சிதைத்து குண்டு வெளியேறியதும், சிலருக்கு முதுகின் பின்பகுதியில் குண்டு துளைத்து, இதயம் போன்ற முக்கிய பகுதியை சிதைத்து மார்பின் முன்பகுதி வழியாக வெளியேறியதும் ஓடிக்கொண்டிருந்தவர்களின் மீது துப்பாக்கி சூடு பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதையே காட்டுகிறது.

3. இந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் PSO-இல் சொல்லப்பட்டுள்ள விதி அப்பட்டமாக மீறப்பட்டு இருக்கிறது. இறந்து போனவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் இடுப்புக்கு மேல் காணப்பட்டிருப்பதும், PSO-இல்



PC MATIVANAN WITH SLR IN
ANNA NAGAR

சொல்லப்பட்டுள்ளவாறு இடுப்புக்கு கீழே துப்பாக்கி சூடு பிரயோகம் செய்யப்படவில்லை என்பதையும் நிரூபிக்கின்றது.

4. துப்பாக்கி சூடு பிரயோகம் செய்வதற்கு முன்பு போராட்டக்காரர்களை எச்சரிக்கும் விதமாக Public Addressing System மூலமாகவோ அல்லது நன்றாக கேட்கக்கூடிய அளவில் மெகா போன் மூலமாகவோ எச்சரிக்கை செய்யப்படவில்லை. துப்பாக்கி சூடு பிரயோகம் செய்யப்படும் என்பதை வெளிப்படுத்தும் வகையில் கலவரக்கொடி (RIOT FLAG) ஏற்றி காண்பிக்கவில்லை.

5. இதுபோன்ற கொந்தளிப்பான சூழ்நிலையில் காவல் ஆளினர்களை ஒழுங்காக, ஏற்றப்படி நிற்க ஏற்பாடு செய்து, கட்டளைகளை அவர்களுக்கு உரிய முறையில் வழங்கி, அவ்வாறு இடப்படும் கட்டளைகளை அவர்கள் உடனடியாக ஏற்று அர்ப்பணிப்புடன் திறம்பட மேற்கொள்ளுமாறு ஏற்பாடு செய்ய காவல் உயர் அதிகாரிகள் தவறி விட்டனர். மிகவும் முக்கியமாக காவல் உயர் அதிகாரிகளுக்கிடையே கூட ஒருங்கிணைப்பு இருக்கவில்லை. மாவட்ட ஆட்சியர் வளாகத்துக்குள்ளேயே காவல்துறை துணைத்தலைவர் (DIG) திரு.கபில்குமார் சராட்கர் (எ.த.சா.246) மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் (Dy SP) திரு.லிங்கதிருமாறன் (எ.த.சா.212) ஆகியோரின் உத்தரவின் பேரில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூடு, உச்சபட்ச காவல்துறை அதிகாரி காவல் துறை தலைவர் (IG) திரு.சைலேஷ்குமார் யாதவ் அவர்களுக்கு



ANNA NAGAR – PC MATHIVANA SHOOTING UNDER ORDERS OF
SP THOOTHUKUDI MAHENDREN WITH SLR

தெரியவில்லை. அதுபோலதான் திரு.திருமலை (எ.த.சா.197) ஆய்வாளரின் உத்தரவின் பேரில் திரு.ரென்னீஸ்(எ.த.சா.198) நடத்திய துப்பாக்கி சூடும் காவல் துறை தலைவருக்கு (IG) தெரியவில்லை. அது தவிர காவல் துறை தலைவர் (ஐபு) திரு.சைலேஷ்குமார் யாதவ் (எ.த.சா.247) மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் (Dy SP) திரு.லிங்கதிருமாறன் (Ace Shooter) காவலர் திரு.சுடலைக்கண்ணுவிற்கு சுடுவதற்கு உத்தரவிட்டதும், மற்ற அதிகாரிகளுக்கு தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால் காவல் துறை துணைத்தலைவரின் (DIG) Gunmanதிரு.சங்கருக்கு காவல் துறை துணைத்தலைவர் (DIG) உத்தரவிட்டதும், காவல் துறை தலைவர் (IG) திரு.சைலேஷ்குமார் யாதவுக்கு தெரியவரவில்ல்லை. காவல் துறை தலைவர் (IG) மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்குள்ளேயே இருந்திருந்தும், காவல் துறை துணைத்தலைவர் (DIG) அவராக அதிகாரத்தை எடுத்துக்கொண்டு துப்பாக்கி சூடை நடத்தியிருக்கிறார்.

6. காவல் உயர் அதிகாரிகளுக்கிடையே ஒருங்கிணைப்பு இல்லாத காரணத்தால், நேரிடக்கூடிய சம்பவத்தை எதிர்கொள்ளக் கூடிய தயார் நிலையில் இல்லாத நிலை எற்பட்டுள்ளது. இதற்கு காவல் துறை தலைவர் (IG) திரு.சைலேஷ்குமார் யாதவ் (எ.த.சா.247) அவர்களும் ஒரு விதத்தில் பொறுப்பாகிறார். பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய சாத்தியக்கூறு அதிகம் உள்ளதாக உளவுத்துறை தலைவர் (IG Intelligence) போதிய அளவு எச்சரித்தும் அதற்கேற்றவாறு சூழ்நிலைக்கு எற்ப



ANNA NAGAR

பொருத்தமான உத்திகளை மேற்கொள்ளாதது அவருடைய தவறுகை ஆகும். மாவட்ட ஆட்சியர் வளாகத்துக்குள்ளே நடைபெற்ற முதல் துப்பாக்கி சூட்டில் 5 பேர் பலியானார்கள். அதன் பின்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வெளியே முறப்பநாடு காவல் ஆய்வாளர் வந்த வாகனத்தை போராட்டக்காரர்கள் தாக்கக்கூடும் என்று எண்ணி காவல் துறை தலைவர் (IG) திரு.சைலேஷ்குமார் யாதவ் உதவி ஆய்வாளர் திரு.சொர்ணமணி என்பவரை வைத்து துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டும், அதே சமயத்தில் அதே இடத்தில் (Ace shooter) திரு.சுடலைக்கண்ணுவை காவல் துறை துணைத்தலைவர் (DIG) திரு.கபில்குமார் சராட்கர் துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டதும், அவ்விதம் நடந்த துப்பாக்கி சூட்டில் மூன்று (3) பேர் பலியானதும் வேதனைக்குரிய விஷயம். இந்நிகழ்வை பொறுத்தமட்டில் போராட்டக்காரர்களிடம் இருந்து தடுக்கக்கூடிய தீமையை விட போராட்டக்காரர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட துப்பாக்கி சூடு மிகவும் கொடுமையானது என்று இந்த ஆணையம் கருதுகிறது.

7. இச்சந்தர்ப்பத்தில் ஒன்றை குறிப்பிட வேண்டியுள்ளது. முக்கியமான நேரத்தில் தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளர் திரு.மகேந்திரனும் (எ.த.சா.248) திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பாளர் திரு.அருண்சக்திகுமாரும் (எ.த.சா.240) துப்பாக்கி சூடு நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் இல்லாமல் மதியம் 1.15 மணி வரை வெளியே இருந்துவிட்டு தமிழ் தெரியாத, தூத்துக்குடி ஸ்தல விபரம் பற்றி அவ்வளவாக பரிச்சயம் இல்லாத காவல் துறை தலைவர் (IG) மற்றும் காவல் துறை



துணைத்தலைவர் (DIG) ஆகியோரை போராட்டத்தை தடுத்துக்கொள்ளும் நிலையை உண்டாக்கிவிட்டு, திரு.மகேந்திரன் சாவகாசமாக FCI Godown-க்கு வந்து காவல் துறை தலைவர் (IG) அவர்களிடம் எந்தவிதமான அறிவுரையும் பெறாமல், Ace shooter காவலர் திரு.சுடலைக்கண்ணுவை அழைத்துக் கொண்டு தொடர் துப்பாக்கி சூடை நடத்தி இருப்பதும், திரு.சுடலைக்கண்ணு விருப்பத்துடனும், ஆர்வத்துடனும் தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளர் திரு.மகேந்திரனுடன் சென்று நடத்திய துப்பாக்கி சூட்டில் 2 பேர் பலியாகி, ஒரு பெண்மணி திரேஸ்புரத்தில் பலியாகி இருப்பது வேதனைக்குரிய ஒன்றாகும். ஒரு தீவிரவாத போராட்டக் கூட்டத்தை எதிர்ப்பது போல் இந்த துப்பாக்கிசூடு நடத்தியதை ஏற்க முடியவில்லை. அவ்வாறு கருதுவதற்கும் எந்த ஆதாரமும் இல்லை. ஏற்கனவே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த துப்பாக்கி சூட்டையும், அதில் இறந்து போனவர்களைப்பற்றியும் அங்கும் இங்குமாக நின்று சிலாகித்து கொண்டிருந்தவர்களை நோக்கிதான் திரு.மகேந்திரன் அவர்களால் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது. அதுவும் தனியாளாக திரு.சுடலைக்கண்ணு மொத்தம் 17 ரவுண்டுகள் சுட்டு இருக்கிறார். அதுவும் அபாயகரமான (Self Loading Rifle) துப்பாக்கி கொண்டு சுட்டிருக்கிறார்.

மற்றுமொரு காவல் துறையினரின் வரம்பு மீறலானது தனியார் மருத்துவமனையான AVM மருத்துவமனையில் உள்ளே அத்து மீறி நுழைந்து, கண்ணில் பட்டோரையெல்லாம் கண்மண் தெரியாமல் லத்தி, கம்பு கொண்டு தாக்கியது ஆகும். இச்சம்பவம் குறித்து அந்த தனியார் மருத்துவமனையின்



வரவேற்பாளரும், பாதுகாப்பு அதிகாரியும் மற்றும் சிகிச்சையிலிருந்து பொதுமக்களில் சிலரும் சாட்சியமளித்து இருக்கின்றனர்.

அண்ணாநகரில் 23.05.2018 அன்று நடைபெற்ற துப்பாக்கி சூடு சம்பவத்திற்கு முன்பு ஏற்பட்ட கல்லெறிதலில் காவல் கண்காணிப்பாளர் திரு.மகேந்திரனின் (எ.த.சா.248) தலைக்கவசத்தின் (Helmet) முன் கண்ணாடி உடைக்கப்பட்டதால் சற்று நிலை குலைந்து போய் இருக்கிறார், மேலும் அவருடைய இடது காலில் கல்லெறிதலால் இரத்த காயம் ஏற்பட்டிருக்கிறது, சில இளைஞர்கள் முந்தைய தினம் அதாவது 22.05.2018 அன்று நடந்த துப்பாக்கி சூடு மற்றும் உயிரிழப்பு காரணமாக மனகிளர்ச்சியுற்று தொடர் கல்லெறிதலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் உணர்ச்சி வசப்பட்டு தன்னுடைய Gunmanதிரு.ஸ்டாலினிடம் இருந்து கைத்துப்பாக்கி (Pistol)யை பெற்று மொத்தம் 9 ரவுண்டுகள் திரு.மகேந்திரன் சுட்டது சரியானது அல்ல. அந்த துப்பாக்கி சுடுதலில் யாரும் காயம் பட்டிருக்க முடியாது என்று திட்டவட்டமாக கூறமுடியாது. எனென்றால் அண்ணாநகரில் சில இளைஞர்களுக்கு துப்பாக்கி சூடு காயம் ஏற்பட்டுருக்கிறது.

10. ஆணையத்தால் விவரித்து சொல்லப்பட்டுள்ள காரணங்களினால் காவல்துறையினர் வரம்பு மீறி செயல்பட்டிருக்கின்றனர் என்பது ஆணையத்தின் தீர்க்கமான முடிவாகும். அது தவிர தற்காப்புக்காக துப்பாக்கி சூடு நடத்தியதாக இச்சம்பவத்தின் நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள்


NEWS 18
தமிழ்நாடு
/ News18TamilNadu
VIDEOCON: 589 AIRTEL: 793 TATA SKY: 1561 | JIO TV | All Cable Network

தெரிவிக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் தற்காப்புக்காக துப்பாக்கி சூடு நடத்தியதாக காவல்துறையினரின் வாதமும் இல்லை.

எனவே காவல்துறையினர் உயர் அதிகாரிகள் முதல் காவலர்கள் வரை 22.05.2018 மற்றும் 23.05.2018 அன்று நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்திற்கு தனித்தனியாகவும், கூட்டாகவும் பொறுப்பாகிறார்கள்.

**11.** The police officials in the hierarchy who are jointly and severally accountable are:

| | | | |
|---|---|---|---|
| i | IG | Tr. Shailesh Kumar Yadav, I.P.S.,**(RW 247)** | Collectorate |
| ii | DIG | Tr. Kapil Kumar C Saratkar,I.P.S.,**(RW 246)** | Collectorate |
| iii | SP, Thoothukudi | Tr. P.Mahendran **(RW248)** | 3rdMile, Threspuram& Anna Nagar |
| iv | DYSP | Tr. Lingathirumaran **(RW 212)** | Collectorate |
| v | Inspector | Tr. Thirumalai **(RW 197)** | Collectorate |
| Vi | Inspector | Tr. Hariharan **(RW 213)** | Outside Collectorate |
| vii | Inspector | Tr. Parthiban **(RW 214)** | Threspuram |
| Vii | Sub-Inspector | Tr. Sornamani **(RW 211)** | Outside Collectorate |
| Xi | Sub-Inspector | Tr. Rennes**(RW 198)** | Inside Collectorate |


NEWS 18
தமிழ்நாடு
/ News18TamilNadu
VIDEOCON: 569 AIRTEL: 793 TATA SKY: 1561 | JIO TV | All Cable Network

| | | | |
|---|---|---|---|
| X | Gr-II PC-1160 | Tr. Raja **(RW 200)** | Inside Collectorate |
| Xi | Gr-I PC-1244 | Tr. Shankar **(RW 201)** | Inside Collectorate |
| Xii | Gr-I PC-3200 | Tr. Sudalaikannu **(RW 207)** | Collectorate,3rd Mile, Threspuram |
| Xiii | Gr-II PC-1158 | Tr. Thandavamurthy**(RW199)** | Collectorate |
| Xiv | Gr-I PC-3083 | Tr. Satheesh Kumar **(RW 202)** | Inside Collectorate |
| Xv | HC - 413 | Tr. A. Raja **(RW 203)** | Outside Collectorate (from top of the van) |
| Xvi | Gr-I PC-1085 | Tr. M. Kannan**(RW 210)** | Anna Nagar |
| Xvii | PC- 1298 | Tr.Mathivanan**(RW 221)** | Anna Nagar |

**12. This Commission suggests that action be taken against the aforesaid police officers for their acts of commission and omission departmentally without prejudice to launching criminal action.**

13. இந்த ஆணையத்தின் முன்பு இருந்த ஆவணங்கள் அடிப்படையில் கைவசம் துப்பாக்கி வைத்து இருந்த காவலர் பெயர், என்ன வகை துப்பாக்கியை கையாண்டார், எந்த உயர் அதிகாரியின் உத்தரவுபடி கையாண்டார், யார் யார்



SUN INSPECTOR IN PILLION  WITH PISTOL

உயிரிழப்புக்கு அது காரணமாக இருந்தது என்ற விபரங்கள் அடங்கிய அட்டவணை நிரல் அட்டவணை 1 ஆக இணைக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட ஆட்சியர் திரு.வெங்கடேஷ், இ.ஆ.ப. (எ.த.சா.243) அவர்களின் பங்கும், பொறுப்பும்**

14. மாவட்ட ஆட்சியர் திரு.வெங்கடேஷ், இ.ஆ.ப. (எ.த.சா.243) அவர்களின் நடவடிக்கை மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது. கிளர்ச்சியும் குழப்பமுமாக இருந்த சூழ்நிலையில், ஒரு மாவட்டத்தின் பொறுப்பும், அதிகாரத்திலும் உள்ள அதிகாரி, தூத்துக்குடியிலேயே தன்னுடைய முகாம் அலுவலகத்தில் இருந்திருந்தும் 20.05.2018 அன்று நடந்த அமைதி பேச்சுவார்த்தையை தான் முன்னிலை வகித்து நடத்தாமல், அதன் முக்கியதுவத்தை உணராமல் தனக்கு அடுத்து 3வது நிலையில் உள்ள சார் ஆட்சியர் திரு.எம்.எஸ்.பிரசாந்த், இ.ஆ.ப.(எ.த.சா.244) அவர்களை அந்த சூழ்நிலையை கையாளுமாறு விட்டது அவர் தம் பொறுப்பை தட்டி கழித்திருக்கிறார் என்பது கண்கூடாகத் தெரிகிறது. ஆணையம் அன்று முக்கிய அலுவலாக அவர் தம் அலுவலகத்தை விட்டு வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏதேனும் இருந்ததா என்பதை அறியும் பொருட்டு 13.07.2018 தேதியிட்டு எழுதிய எ.த.சா.ஆ.124 கடிதத்திற்கு வரப்பெற்ற பதில் 18.07.2018 தேதியிட்ட எ.த.சா.ஆ.125 கடிதத்தின்படி அவர் அன்றைய தினம் முகாம் அலுவலகத்தில் தான் இருந்துள்ளார் என்பது உறுதிபட தெரிகிறது. எனவே அவர் தம் முகாம் அலுவலகத்தில் இருந்திருந்தும் எந்த

காரணமும் இன்றி அமைதி பேச்சு வார்த்தையை நடத்தாமல் தவிர்த்து பொறுப்பை தட்டி கழித்திருக்கிறார் என்பது தெளிவாகிறது.

(பத்தி 46- பக்கம் எண்:40)

மாவட்ட ஆட்சியர் திரு.வெங்கடேஷ், இ.ஆ.ப.(எ.த.சா.243) அவர்கள் 21.05.2018க்கு முந்தைய தினம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.மகேந்திரனுடனும், சார் ஆட்சியர் திரு.எம்.எஸ்.பிரசாந்த் (எ.த.சா.244) அவர்களுடனும் 22.05.2018 அன்று எஸ்.ஏ.வி பள்ளி மைதானத்தில் நடைபெற இருந்த கவன ஈர்ப்பு போராட்டத்திற்கு செய்யப்பட்டுள்ள பந்தோபஸ்து ஏற்பாடுகள் குறித்து அலைபேசி (Mobile) மூலம் பேசி தெரிந்து கொண்டதாகக் கூறுகிறார். ஆனால் அதே மாவட்ட ஆட்சியர் 21.05.2018 வரை, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை போராட்டக்காரர்கள் முற்றுகையிட இருந்த விபரமே தனக்குத் தெரியாது என்று கூறுகிறார். இத்தகைய கூற்று எடுத்த எடுப்பிலேயே நிராகரிக்கக் கூடியது. ஏனெனில் காவல் துறை தலைவர் (IG), காவல் துறை துணைத்தலைவர் (DIG), காவல் கண்காணிப்பாளர் (SP) ஆகியோர் 21.05.2018 இலிருந்து தூத்துக்குடி மாவட்ட காவல் அலுவலகத்தில் முகாமிட்டு இருந்திருக்கின்றனர். மேற்சொன்ன மூன்று காவல் உயர் அதிகாரிகளுக்கும் உளவுத்துறையின் நுண்ணறிவு தகவல்கள் கொடுக்கப்பட்டு வந்தன என்பது (IG Intelligence) உளவுத்துறை தலைவர் திரு.சத்திய மூர்த்தியின் சாட்சியம் மூலம் தெரிய வருகிறது. அதாவது நிலைமை மோசமாகி கொண்டு வருகிறது என்பதை அவர் ரகசிய மற்றும் முக்கியமான தகவல் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

காவல் துறை தலைவரோ (IG) அல்லது காவல் துறை துணைத்தலைவரோ (DIG) அல்லது காவல் கண்காணிப்பாளரோ தன்னிடம் அந்த தகவல்களை பரிமாறவில்லை என்ற மாவட்ட ஆட்சியரின் கூற்று எடுத்த எடுப்பிலேயே நிராகரிக்கக்கூடியது. சார் ஆட்சியர் முன்னிலையில் 21.05.2018 அன்று நடைபெற்ற அமைதி பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துள்ளது. அந்த பேச்சுவார்த்தையில் தீர்மானம் செய்யப்பட்டபடி இன்னொரு பேச்சுவார்த்தை மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் நடத்தப்படவேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டிருந்தும், என் மற்றொரு பேச்சுவார்த்தை நடத்தப்படவில்லை என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை. 20.05.2018 மற்றும் 22.05.2018 தினங்களுக்கு இடையே போதிய கால அவகாசம் இல்லை என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. சூழ்நிலையின் அவசியம் மற்றும் அவசரம் கருதி உடனடியாக 2வது அமைதி பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்து அனைத்து தரப்பினரும் பங்கெடுத்து கொள்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டிருக்க வேண்டும். நடக்க இருந்த போராட்டத்தின் விளைவு குறித்து சரியான முறையில் கணிக்க முடியவில்லை என்ற கூற்றையும் ஏற்றுக்கொள்ள முடியாது. மாவட்ட ஆட்சியர் திரு.வெங்கடேஷ், இ.ஆ.ப.(எ.த.சா. 243) அவர்களின் செயலின்மை, அக்கறையின்மை மற்ற அதிகாரிகளுடன் இணக்கமின்மையையே அது காண்பிக்கிறது. அவர்தம் கடமையிலிருந்து தவறிவிட்டார்.

விசாரணை ஆணையத்தின் ஆய்வு வரம்புகள் காவல்துறையினரை பொறுத்தமட்டில் மட்டுமே இருந்தாலும், மாவட்ட ஆட்சியரின் நடவடிக்கைகள் (Commission and Omission) குறித்து ஏற்கனவே பாகம் 1 இல் விவரிக்கப்பட்டு இருப்பதால் மீண்டும் மீண்டும் அதை சொல்ல தேவையில்லை. சாட்சியங்கள் மற்றும் சான்றுகளை ஆராய்ந்ததில் அவர் தன் கடமையிலிருந்து தவறியதும், ஆரம்பம் முதல் அவரின் அலட்சிய நடவடிக்கைகள்தான் போராட்டம் துப்பாக்கி சூட்டில் முடிவடைய அடித்தளமாக இருந்தது என்று ஆணையம் கருதுவதால் மாவட்ட ஆட்சியர் திரு.வெங்கடேஷ், இ.ஆ.ப.(எ.த.சா.243) மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க தகுந்த முகாந்திரம் உள்ளது என்று ஆணையம் கருதுகிறது.

## சிறப்பு நிர்வாக நடுவர்களின் பங்கும் பொறுப்பும்

22.05.2018 அன்று போராட்டம் நடக்க இருந்தது நன்கு தெரிந்த ஒன்று. அதற்காக சார் ஆட்சியர் திரு.எம்.எஸ்.பிரசாந்த் அவர்கள் 21.05.2018 தேதியிட்ட உத்தரவின் மூலம் காவல் துறையினருடன் இணைந்து பணியாற்ற வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் ஆகியோரை சிறப்பு நிர்வாக அதிகாரிகளாக பல்வேறு பகுதிகளுக்கு நியமனம் செய்து இருக்கிறார். அவ்வாறு நியமனம் செய்யப்பட்டு, அவரவர்க்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றாமல் அவர்கள் நியமனம் செய்யப்படாத பகுதிகளுக்கு (வேறு சிறப்பு நடுவர்கள் நியமனம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு) தன்னிச்சையாகவோ அல்லது அவர்களின் மேல் அதிகாரி உத்தரவு இருப்பதாக சொல்லிக்கொண்டோ சென்று

